★ ★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 கார்த்திகை 6 ஜுல்ஹஜ் 20 இதழ் 283
யாழ்ப்பாணம் புதன்கிழமை 22-11-78

Duplicating
ஆங்கிலத்திலும் தமிழிலும்
Notes, கேள்விப்பத்திரங்கள்,
குறிப்புகள் முதலியன
CYCLO-STYLE செய்யவும்
போட்டோஸ்டாட் பிரதிகளுக்கும்
சுப்பகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

## பிரேமாவும் சேர்ஜோனும் ஒலிவரைச் சந்தித்தனர்

(கொழும்பு)

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவும், முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையும் நாடு திரும்பியுள்ள முன்னாள் தேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலகாவைச் சந்தித்தனர்.

பூரண ஓய்வெடுக்க வே...

(6ம் பக்கம் பார்க்க)

UNIVERSITY OF ... PERIODICALS ... LIBRARY

# ஏழைக் குழந்தைகளுக்கு குறைந்த விலையில் பால் மா

## அரசின்புதியதிட்டம்குறித்து ஆட்சிமன்றத்தில் ரேனி

(கொழும்பு)

குழந்தைகளின் பால் மா விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளபோதிலும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு முன்னைய விலையில் பால்மாவை விநியோகிக்க அரசு தீர்மானித்து இதற்கான திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது.

இவ்வாறு நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசுக்கு கணிசமான அளவு நஷ்டம் ஏற்படுமாயினும் ஏழை மக்களின் நலன்கருதி அவர்களுக்கு உதவுமுகமாகவே ஏற்கனவே அமுலில் இருந்த விலையில் பால்மா வகைகளை விற்பனை செய்ய அரசு தீர்மானித்துள்ளது என்றும் திரு. டிமெல் கூறினார்.

பால்மா வகைகள் கறுப்புச் சந்தைக்காரர்களின் கைகளில் சிக்காமலிருக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சியினர் இவ்விஷயத்தில் பூரண ஒத்துழைப்பு வழங்கி ... உதவ வேண்டும் என்றும் கறுப்புச்சந்தையை எவ்விதத்திலும் தடுக்காக வேண்டும் என்றும் திரு. ரொனி டி மெல் கேட்டுக்கொண்டார். (ம)

## இந்திராகாந்திக்கு மீண்டும்நெருக்கடி

புதுடில்லி, நவ. 21

சிக்மகளூர் தீர்ப்பு மூலம் மீண்டும் பாராளுமன்றத்துக்குள் [நேற்று] பிரவேசித்த முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு எழுதிய மை காய்வதற்குள் மீண்டும் மற்றுமொரு நெருக்கடி இன்று ஏற்பட்டது.

பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையை அவமதித்ததாகவும், சலுகைகளை மீறி நடந்ததாகவும் திருமதி இந்திராகாந்தி மீது குற்றம்சாட்டப்பட்டு, இதுசம்பந்தமாக பாராளுமன்றத்தின் [லோக சபையின்] விசேட உரிமைகள் குழு விசாரணை நடத்தி, தனது அறிக்...

[6ம் பக்கம் பார்க்க)

## இறக்குமதி அதிகரிப்பால் உள்ளூர் உற்பத்தி பாதிப்பு!

### வரவு செலவுத் திட்டவிவாதத்தை ஆரம்பித்து நல்லூர் 'சிவா' உரை

(கொழும்பு)

அரசாங்கம் பெருமளவிலான பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதித்ததன் காரணமாக உள்ளூர் உற்பத்தித்துறை பாதிக்கப்பட்டுவிட்டது.

இவ்வாறு நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் நேற்றுப் பாராளுமன்றத்தில் கூறினார்.

எதிர்க்கட்சி சார்பில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே திரு. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

அரசு பதவி ஏற்று ஓராண்டு காலம் பூர்த்தியாகிவிட்டது. இக்காலப்பகுதியில் அரசு மேற்கொண்ட அபிவிருத்தி வேலைகளை மக்களுக்குத் தெரிவிக்கவேண்டியது அரசின் கடமையாகும் என்றும் திரு. சிவசிதம்பரம் கூறினார். [இ]

## இருளில் மூழ்கிய பாராளுமன்றம்

### 'சிகரெட்லைட்'டர்களினால் ஒளிபரப்பினார்கள்!

[கொழும்பு]

பாராளுமன்றம் நேற்று முன்தினம் இரவு, பல சந்தர்ப்பங்களில் இருளில் மூழ்கியது.

நேற்றுமுன்தினம் இரவு 7-47 முதல் சில நிமிட நேரத்துக்குநீடித்த மின்சாரத் தடையினால் சபை இருளில் மூழ்கியது.

சில அங்கத்தவர்கள் தங்கள் வசமிருந்த சிகரெட் 'லைட்'டர்களால் சபைக்கு ஒளிபரப்பி...

[6ம் பக்கம் பார்க்க)

## 'ரூபா மதிப்பு உயர்ந்தது'

(கொழும்பு)

இலங்கை ரூபாவின் மதிப்பு மீண்டும் உயர்ந்துள்ளது'' என்று வர்த்தக அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கையின் நேர்த்தியான நிதிக்கொள்கையினால் தான் சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளதென்று அமைச்சர் தெரிவித்தார். [ம]

## எம். பி. க்கு 3 ஆண்டு சிறை!

வாஷிங்டன், நவ. 21

அரசின் பணத்தை மோசடி செய்த எம். பி. ஒருவருக்கு அமெரிக்க நீதிமன்றம் 3 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளது.

அமெரிக்க எம். பி. யான திரு. சார்ள்ஸ் 60 ஆயிரம் டாலர் அரசாங்கப் பணத்தை மோசடி செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

தமக்குக் கீழே வேலைக்கு வைத்திருந்த சிலருக்கு அதிக சம்பளத்தை அரசிடமிருந்து வாங்கிக்கொடுத்துவிட்டு ஊழியர்களிடமிருந்து பதிலாகப் பணம் பெற்றாராம் அந்த எம். பி. (உ)

## மகாதேவா பாலத்திற்கு ரூபா 150 லட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கேரதீவு-சங்குப்பிட்டி பால வேலைக்கு 150 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

1979 ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், பெருவீதிகள் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் இந்த நிதியை ஒதுக்கியுள்ளது.

இப்பால வேலையைச் செய்து தருமாறு நீண்டகாலமாக, மக்கள் கோரிக்கை விடுத்துவந்தனர். உப்பு உற்பத்தி பாதிக்கப்படும் என்ற காரணத்தினால் இடைநடுவில் இப்பால வேலை கைவிடப்பட்டிருந்தது.

வடபகுதி மக்கள் பன்னர், திருக்கேதீஸ்வரம் செல்வதற்கு இப்பால வேலை முடிவுறாததினால் பெரும் கஷ்டமடைந்து வருகின்றனர். ஒழுங்கான பாதைச்சேவை, பஸ் சேவை இல்லாததினால், நீண்ட நேரம் கரைகளில் மக்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

கிழக்கிலும் வேலைகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

## "கூட்டுறவுச்சங்கத்தை ஆரம்பித்து அரசுடன் தொடர்புகொள்ளுங்கள்"

### வடபகுதி வெங்காயம், மிளகாய் உற்பத்தியாளருக்கு லலித் யோசனை

[கொழும்பு]

நேற்று ஆரம்பமான வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது, வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி பேசுகையில், வடபகுதி வெங்காயம், மிளகாய் உற்பத்தியாளர்கள், தங்களுக்குள் கூட்டுறவுச் சங்கமொன்றை அமைத்து அதன் மூலம் தங்கள் குறைகளை அரசாங்கத்திடம் தெரிவிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

வெங்காயம், மிளகாய் உற்பத்தி சம்பந்தமாக வடக்கு, தெற்கு விவசாயிகள் மத்தியில் சச்சரவு நிலவுகிறதென்று குறிப்பிட்ட அமைச்சர், இதன் காரணமாக விலையை நிர்ணயிக்க முடியாமல் இருக்கிறதென்று தெரி...

(6-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன்
சீமெந்து தொழிற்சாலை
காங்கேசன்துறை.

# 1979 ஆண்டுக்கான உள்ளூர் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

1979-ம் வருட காலத்திற்கு பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு காங்கேசன்துறை காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையுடன் தம்மை வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்பும் யாழ் மாவட்டத்திலுள்ள வழங்குநர்கள் அல்லது நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. எழுதுகருவிகள்
2. காரியாலய உபகரணங்கள்
3. தளபாடங்கள்
4. மின்சாரப் பொருட்களும், இணைப்புகளும்
5. பெயின்டுகள், வாணிஸ்கள் உட்பட பொது இரும்பு பொருட்கள்
6. மலசலகூட, வீட்டுப் பாவனை இணைப்புகள்
7. பொறியியல் பொருட்கள், கருவிகள் மற்றும் சாதனங்கள்
8. கயிறு, தும்பு, தும்புக்கட்டு, ஈர்க்குக்கட்டு மற்றும் நார்க்கடகங்கள்
9. மோட்டார் உதிப் பாகங்கள்
10. மரத்துண்டுகள்
11. மண் பாத்திரங்கள் கண்ணாடிப்பாத்திரங்கள்
12. ஆற்று மணல், குருகு மணல், நொருக்கிய உலோகங்கள்

## சேவைகள்

1. அச்சடித்தல்
2. ஒதயல் வேலைகள்
3. தட்டச்சு, ரோனியோ, கல்குலேற்றர், யந்திரங்கள் பழுதுபார்த்தல்
4. காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கும் காங்கேசன்துறையிலிருந்து புத்தளத்திற்கும் லொறி போக்குவரத்துச் சேவை
5. எரிபொருள் இன்ஜெக்டர்கள் பழுது பார்த்தல்

பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், சேவையாளர்கள் தங்களால் வழங்கப்படக்கூடிய சேவைகளின் வகைகளையும், பொருட்களையும் விண்ணப்பத்தில் குறிப்பிடவேண்டும். வழங்குநர் ஒன்றுக்கு மேற்பட்ட சேவைக்கு தம்மை பதிவு செய்ய விரும்பின் ஒவ்வொரு விடயத்திற்கும் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பவேண்டும். பதிவு செய்யப்பட்ட வழங்குநர் பட்டியலிலிருந்தே வழமையாக விலைக்கூறுகள் கோரப்படும் எனினும் மற்றைய வழங்குநர்களிடமிருந்தும் விலைக்கூறுகள் கோரும் உரிமை நிறுவனத்திற்கு உண்டு.

ஒழுங்கான இடைவேளைகளில விலைக்கூறுகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது விலைக்கூறுகள் சமர்ப்பித்தபின் பொருட்களை/சேவைகளை வழங்கத்தவறும் வழங்குநர்கள/சேவையாளர்கள் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்படும்.

பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் '1979 இன் வழங்குநர்கள் பதிவு' என உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டு கீழே ஒப்பமிடப்பட்டவருக்கு 1978 டிசெம்பர் 7-ந் திகதிக்கு பிந்தாது கிடைக்கக்கூடிய தாக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

குறிப்பு:- யாழ் மாவட்ட எல்லைக்குள் உள்ள நிறுவனங்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

தொழில் முகாமையாளர்.
காங்கேசன்
சீமெந்து தொழிற்சாலை,
காங்கேசன் துறை,
1978-11-16. 0847

# இன்றைய இராசிப் பலன்

கார்த். மாதம் 6-ந் திகதி புதன்கிழமை (22-11-78)

மேடம்:- கடமையில் மூதவிடம் இடைக்கும், வியாபார விருத்திக்குமிடமுண்டு, சிலர் இடமாற்றத்திறதும் ஆலோசிப்பர்.

இடபம்:- புதிய வழிகள் மூலம் பொருள் வரவிற்கு இடமுண்டு, தொழில் துறையிலும் மகிழ்ச்சி தென்படும், பெரியோர் ஆதரவும் உண்டு.

மிதுனம்:- சிறிவரும் கோபம் உங்களை நிலை தடுமாற வைக்கும், தானிய நஷ்டத்திற்கும் இடமுண்டு. அடக்கமும் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் [illegible]ண்மையும் வேண்டும்.

கடகம்:- எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் தென்படும், எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும், பொறுமை நன்று.

சிங்கம்:- கனிவான பேச்சின் மூலம் காரியத்தில் கண் வைப்பீர்கள், காதல் விவகாரங்களுக்கு இடமுண்டு, சுப தினம்.

கன்னி:- சடந்தகால எண்ணங்கள் மனதுக்கு வேதனை தரும், சிறு பிணிக்கும் இடமுண்டு, அடக்கம் வேண்டும்.

துலாம்:- பயன் தரும் பயணமொன்றும் மேற்கொள்ளப்படலாம், கருத்து வேற்றுமை மறைந்து நல்ல முடிவு ஏற்படும், தாய்வழி ஆதரவும் உண்டு.

விருச்சிகம்:- கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு புத்திரவழியாலும் மகிழ்ச்சியுண்டு, நிம்மதியான தினம்.

தனுசு:- பகைவர்கள் சூழ்ச்சிவலை விரிப்பதற்கு முனைவர், வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு, சுகாதாரம் வேண்டும், சிலருக்கு நயன ரோகமும் தென்படும்.

மகரம்:- வாழ்க்கையில் உற்சாகம் தென்படும், காதலர் வாழ்வில் கனிவான சம்பவங்களுக்கு இடமுண்டு, களஸ்திரவழியாலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு.

கும்பம்:- விபத்துக்கிடமேற்படும், தொழில் துறையில் நஷ்டமுண்டு, சிலர் கடனைபடவும் நேரிடும், நிதானம் நன்று.

மீனம்: இரக்க சிந்தை மேலிடும் பிதா வழிமூலம் ஆதரவிற்கிடமுண்டு, கண்ணியமான நாள்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்.

நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற தியாகராசா சூரியலட்சுமி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,
மரணமெய்தியவர்
தெஹிவளை பிறேசர் வீதி, 30 ஏ இலக்கத்தைச் சேர்ந்த தியாகராசா கணேசர்.
மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3390

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30-ம் நாளன்று முற்பகல் ........மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது 0793

## சங்கானை ப. நோ. கூ. சங்கம் கேள்விவிளம்பரம்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 12,000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்தி கேள்வி விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் பதிவுத்தபால்மூலம் இடதுபக்க மூலையில் "வெற்றுச் சாக்குகள் கேள்வி" என்று எழுதப்பட்டு பொதுமுகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30-11-78.

பொதுமுகாமையாளர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை.
17-11-78. 0829

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வவுனியாவில் 20 பேர்ச் கடைகட்டக்கூடிய நிலம் பஸ் நிலையத்திற்கு எதிரே விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு தரகர்கள் இல்லை சனி, ஞாயிறுகளில் நேரில் தொடர்பு கொள்ளவும் 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 0841

## ஏல விற்பனை அறிவித்தல்

1978-ம் ஆண்டு நவம்பர் மாதம் இருபத்தெட்டாம் திகதி (1978-11-28) செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் றக்கா வீதிச் சந்திக்கருகில் இரண்டு மகோகனி மரமும், ஒரு மருதமரமும் டகிரங்க ஏலத்தில் விற்கப்படும். சித்தி பெற்ற கேள்விக்காரர் உடனடியாக மரத்தை வெட்டி அப்புறப்படுத்தல்வேண்டும்.

க. சிவஞானம்,
யாழ். மாநகர ஆணையாளர்.

வேலைப்பகுதி,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
15-11-78. 0853

### விற்பனைக்கு

லம்பிரட்டா ஸ்கூட்டர் இத்தாலி 5 சிறி 150 சிசி, சறிய குளிர்சாதனப் பெட்டி, ஸ்கந்தராசா, கலகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. 0845

## புதிய கிராம சேவகர்கள்

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் அண்மையில் கிராமசேவையாளர்களாக நியமனம் பெற்ற 17 பேருக்கும் இதற்கான பயிற்சி முடிவடைந்து வருகிறது.

ஜே. என். பி. பாக்கியராஜா நயினாதீவு வடக்கிலும் பீ துரைசிங்கம் மந்துவிலிலும் எஸ் ராதாகுமாரன் நெடுந்தீவு மத்தியிலும் சி. சந்திரசேகரன் கரம்பனிலும் ஓ சச்சிதானந்தன் சரவணையிலும் எஸ. குமாரதாஸன் காவற்துறையிலும் என். ஜெகதீஸ்வரன் திருநெல்வேலியிலும் எஸ். விஜயகுமார் கட்டுவனிலும் ரீ தளபாலசிங்கம் முசாவிலிலும் வி. வண்ணைமாறன் முகமாலையிலும் எவ் இராசேஸ்வரன் கிளிநொச்சியிலும் எஸ். தனபாலசிங்கம் உருத்திரபுரத்திலும் ஆர் தியாகலிங்கம் தர்மபுரத்திலும் ஆர். இராசேந்திரன் கேவுதார் முனையிலும் கே. வேலாயுதம்பிள்ளை தெல்லிப்பழை வடகிழக்கிலும்

(6-ம் பக்கம் பார்க்க)


## வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

நாம் பெருமளவில் கொப்பரு கொள்முதல்செய்கின்றோம். ஆகவே எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் நல்ல விலை போட்டுத் தருவோம். உடன், உங்கள் விற்பனைக்குத் தொடர்புகொள்ளவும்.

சி. எஸ். கே. மில்ஸ்,
யாழ்ப்பாணம்.
1834

## "அகுபஞ்சர்" வைத்தியமுறை பயிற்சி

"அகுபஞ்சர்" எனும் சீன வைத்தியமுறை 1979ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பிரபல சென்னை டாக்டர் மூலமாக டாக்டர்களுக்கும், வைத்திய மாணவர்களுக்கும் யாழ்ப்பாணத்தில் வைத்து பயிற்சியளிக்கப்படும். பயிற்சிபெற விரும்புவோர் ரூபா 1-00க்கான தபாற்கட்டளையுடன் வடஇலங்கை ஹோமியோபதி சங்கம, 5, நாவலர் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 1-12-78க்கு முன்னர் தொடர்பு கொள்க. 0844

## முற்றிலும் புதுப்பிக்கப்பட்டவை

மோட்டார் சைக்கிள்கள்

| | | | |
|---|---|---|---|
| ஹொண்டா | —C 50 | 1973 | ரூபா 5,800.00 |
| ,, | —C 70 | 1973 | 5,990.00 |
| ,, | —C 90 | 1973 | 6.250 00 |
| ,, | —CD90 | 1973 | 6,750.00 |
| ,, | —CD125 | 1974/75 | 9,990 00 |
| ,, | —CB125T | 1976 | 11,990 00 |
| ,, | —CB250 | 1972/73 | 12,100.00 |
| ,, | —CB350 | 1972/73 | 12,890.00 |
| யமாஹா | —YB 90 | 1974/75 | 7,350.00 |
| ,, | —DT 90 | 1975/76 | 11 650.00 |
| ,, | —RD125 | 1975/76 | 11,990 00 |
| ,, | —YB125 | 1974/75 | 8,990 00 |
| சுசுகி | —K 125 | 1974/75 | 7,990.00 |

டிரக்டர்

| | | | |
|---|---|---|---|
| ஹினோமோட்டோ | —MB-140 14HP | 1974 | 19 990 00 |
| ,, | —MB-1100 13HP | 1975/76 | 25,990 00 |
| ,, | —MB-1500 17HP | 1975/76 | 26,990.00 |

டெலிவரி வான்

| | | |
|---|---|---|
| டொயாட்டா RHIIV (6 சீற்) | 1973 - 1600c c. | 48,500 00 |
| ,, ஹை ஏஸ் RHIIV (6 சீற்) | 1974 - 1600c c. | 51,500.00 |

பிரயாணிகள் வான் அன்ட் மினி பஸ்

| | | |
|---|---|---|
| டொயாட்டா DX RHIIB (12 சீற்) | 1974 - 1600c c. | 61,990 00 |
| ,, கொம்பியூட்டர் DX RHL6B (15 சீற்) | 1974 - 1600c.c. | 67,990.00 |

வேல்ட் வைட் ஏஜென்சீஸ்
332, காலிவீதி, கொழும்பு - 3. தொலைபேசி: 29757
தந்தி: "EEDUL"

விபரங்களுக்கு :-
த. சுதாசன்
5, 6-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
0849

ஈழநாடு
The Eelanaadu

## மாதிரி கிராமம்

மாவந்தகம தேர்தல் தொகுதியில் வெறும் களி மண் தரையாகவும், பின் தங்கிய பகுதியாகவும் இருந்து வந்த இவுலகம என்ற ஒரு கிராமம் நவீன வசதிகளுடன் கூடிய அழகான 41 சிறிய வீடுகளைக் கொண்ட நவீனகிராமமாக நிர்மாணிக்கப்பட்டு உதாரகம என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது.

41 சிறு வீடுகளும், 40 நாட்களில் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. பாதைகள், மின்சாரவசதிகள் ஏற்படுத் தப்பட்டுள்ளன. மட்பாண்ட உற்பத்தித்தொழிலில் ஈடுபட்டு வந்த இக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்கள் இவ்வீடுகளில் குடியமர்த்தப் பட்டுள்ளன.

கூட்டுறவு விற்பனை நிலையம், பாலர் பாடசாலை மருத்துவமனை ஆகியனவும் அமைக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் வழங்கிய கட்டிடப் பொருட்களைக் கொண்டு, உள்ளூரில் கிடைக்கும் உபபொருட்களையும், வசதிகளையும் பயன்படுத்தி முழுக்கவும் சுயஉழைப்பின் மூலமே இப்பகுதிமக்கள் இவ்வீடுகளைக் கட்டிஎழுப்பியிருக்கிறார்கள்.

சுமார் 15 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஒவ்வொரு வீட்டையும் கட்டியெழுப்புவதற்கு 6ஆயிரம் வீதமே செலவாகியிருக்கிறதாம்.

இப்பகுதி மக்கள் சாதி, இன, மத அரசியல் வேறுபாடுகளைப் பாராட்டாது ஒத்துழைத்ததும், அரசாங்க அதிகாரிகளும், உள்ளூர்பிரமுகர்களும் முழுமூச்சாக கவனம் செலுத்தியதும் இந்த அரிய சாதனைக்கு முக்கிய காரணமாகும்.

எல்லாவற்றுக்கும்மேலாக மாவத்தகம எம். பி. திரு. எம். டி. பிரேமசந்திர கண்ணும் கருத்துமாக இருந்து இத்திட்டத்தை நிறைவேற உழைத்திருக்கிறார்.

இப்பகுதியிலுள்ள ஒரு பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் மாத்திரம் தனியாக ஒரு வீட்டைப் பொறுப்பேற்று சிறப்பாகக் கட்டி முடித்திருக்கிறார்கள். வெகு தொலைவிலிருந்து கல்லையும், மண்ணையும் இவர்கள் சுமந்துவந்து வீட்டைக் கட்டியெழுப்பியிருக்கிறார்கள் என்ற செய்தி பெருமைப்படக் கூடியதாகும்.

இங்கு பாலர் பாடசாலை ஒன்றை பல ஆயிரம் ரூபாய் செலவில் பிரமுகர் ஒருவர் கட்டிக் கொடுத்துள்ளார்.

முழுநாட்டுக்குமே உதாரணமாக விளங்கக்கூடியதான் இக்கிராமத்துக்கு 'உதாரகம' என்று பொருத்தமாகவே பெயர் சூட்டப் பட்டுள்ளது. இக்கிராமத்தை வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும், பிரதமமந்திரியுமான திரு ஆர் பிரேமதாசா கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார்.

40 நாட்களில் 41 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்ட பிரதம மந்திரி "நினைத்துவிட்டால் நிறைவேற்ற முடியாதென ஒன்றுமில்லையென" பெருமையுடன் குறிப்பிட்டிருக்கிறார்.

கிராமிய மக்கள் மத்தியில் ஒருமைப்பாட்டு உணர்வையும், நல்லெண்ணத்தையும் வளர்க்கமாத்திரமின்றி சுய உழைப்பின் மகத்துவத்தையும் இச்சாதனை வலியுறுத்துவதாகவுள்ளது.

# தலைவர் திருச்செல்வத்தை நினைவு கூருவோம்

- சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம் -

தமிழர் தலைவன் — சட்ட மேதை மு திருச்செல்வம் எம்மைப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன அவர் எம்மை விட்டுப் பிரிவதற்குச் சிலநாட்களுக்கு முன் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய புத்துணர்ச்சியையும் அவர் எம்மைவிட்டுப் பிரிந்தபின் ஏற்பட்ட அரசியல் பூசம்பத்தையும் ஆராயும்பொழுது "இன்று "திரு" இருந்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்குமா?" என்ற கேள்வி எமது உள்ளத்தில் எழுகிறது.

ஈழத்தின் இணையற்ற சட்ட வல்லுநரும், தமிழ்த் தலைவர்களுக்கு எதிரான 'ட்ரயல்-அட் பார்' வழக்கில் ஆணித்தரமான சட்ட வாதங்கள்மூலம் தமிழர் தாயகம்பற்றிய நிலைப்பாட்டினை உறுதிப்படுத்தியவருமான அமரர் மு. திருச்செல்வம் கியு. ஸியின் நினைவு தினம் இன்றாகும். இதனையொட்டி அவர் அமைச்சராக இருந்த வேளை அவரது அந்தரங்கச் செயலாளராகக் கடமையாற்றிய சட்டத்தரணி திரு. பாலசுப்பிரமணியம் அவரைப்பற்றி எழுதியுள்ள கட்டுரை பிரசுரமாகிறது.

அமரர் "திரு" ஒரு தலைசிறந்த சட்டவல்லுனராகவும், தமிழ்த்தொண்டனாகவும் திகழ்ந்தவர்.

சட்டத்துறையில் அவர் புதுப்புது வியாக்கியானங்களைப் புகுத்திப் புதுச்சட்டங்களைத் தமது நுண்ணிய முறையான வாதங்களின்மூலம் ஏற்படுத்தியவராவார். சிங்கள மொழிச்சட்டம் முன்னைய அரசியல் திட்டத்தால் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைக்கொண்ட 29ம் இலக்கஷரத்தை மீறுவதனால் சட்டத்துக்கு முரணானது என்க 'கோடீஸ்வரன வழக்கில்' வாதாடி வெற்றிகண்டவர். ஆனால் அதே மொழிக் கொள்கைச் சமத்துவத்தைக் கடைப்பிடித்து. புத்ததர்மத்தின்படி ஒழுகிவருகிறது என்று கூறப்பட்டும் அரசின் 'புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றிருப்பது "சமத்துவம்", 'புத்ததர்மம்' என்ற சொற்களைக் கேலிக்கிடமான சொற்களாக ஆக்கியுள்ளது.

### இறைமை

தமிழ்பேசும் மக்களின் இறைமை ஏகோபித்த ஒரே கோரிக்கையான 'தனிநாடு' கோரிக்கைசட்டபூர்வமானது, அது தமிழ்பேசும மக்களின் மறுக்கமுடியாத உரிமை என்பதைத் தமது வாதத்திறனால் நீதிமன்றத்தின்மூலம் "ட்ரயல் அட் பார்" வழக்கில் உலகறியச் செய்தது மட்டுமன்றித் தனிநாட்டுக் கோரிக்கையைத் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் மேலும் வலியுறுத்தியவராவர்.

### தீண்டாமை ஒழிப்பில்...

தீண்டாமையை ஒழிப்பதற்கு அவர் முன்னின்று உழைத்தவர். ஒருகாலத்தில் அவர் திரு. சி சுந்தரலிங்கம் அவர்களுடனேயே சேர்ந்து போராடியவரென்பது குறிப்பிடத்தக்கது அத்துடன் சிறுபான்மைத் தமிழ்மக்களுக்கென ஒரு வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கி அதனை அச்சுவேலியில் நிறைவேற்றிவைத்தார்.

### தமிழ் அரசாங்க ஊழியர் உரிமைக்காக

தமிழ் அரசாங்க ஊழியர்கள் அவரை என்றுமே மறக்க முடியாது. அவர்களின் உரிமைக்காக அவர் நீதிமன்றத்தில் வாதாடி வெற்றிகண்டது மல்லாமல் தீர்க்கமுடியாத சில பிரச்னைகளைத் தமது சாதுர்யத்தினால் 1964ல் பிரதமரிடம் வாதாடிப் பெற்றவர்.

### சிங்கள மக்கள் மத்தியில்பிரசாரம்

சிங்கள மக்களின் மத்தியில் எமது கோரிக்கைகளை எவராவது நேரடியாகப் பேசியது கிடையாது ஹபரதுவாவில் எதிர்க்கட்சியிலிருந்த திரு. பிரின்ஸ் குணசேகரா மத்தியில் மாவட்ட சபைகளின் அவசியம் என்பதுபற்றியும் தமிழ்பேசும் மக்கள் சமத்துவ அடிப்படையிலேயே வாழ்ந்திருவார்கள் என்றும் எவ்வித பயமுமின்றி எடுத்துரைத்தார்

1966ல் மொனராகலையில் சமஷ்டி ஆட்சியை விளக்கிய அவர் அந்த ஆட்சிமூலமே நாட்டு ஒருறுமையை ஏற்படுத்தலாமென்றும் சமஷ்டிக்கோரிக்கை ஒரு பிரிவினை வாதம் என்பது வெறும் விதண்டாவாதம் என்றும் ஆணித்தரமாக எடுத்துரைத்துச் சிங்கள மக்களின் தடபான பிரசாரத்தை நீக்கினர்.

### தலைவரின் குணதிசயங்கள்

அமரர் 'திரு' தமது கருத்துக்களை, அதனால் விளையக் கூடிய பலாபலன்களைப்பற்றிப் பயப்படாமல் எடுத்துரைக்கத் தயங்கமாட்டார் ஆனால் தனது தலைவராகக்கொண்ட தந்தை செல்வாவுக்கு என்றுமே கட்டுப்பட்டவர் எந்தச் சூழ்நிலையிலும் ஒரு தலைவருக்குக் கீழ் கட்டுப்பட்டு நடக்கப் பழகினாலேயே விடுதலையடைய முடியுமென்ற நம்பிக்கை கொண்டவர்

தந்தை செல்வா ஒருமுடிவை எடுத்தால் தருமரின் முடிவை வீமன் ஏற்பதுபோல் ஏற்பார் இந்தப் பண்பு இப்பொழுது தமிழ்பேசும் மக்களுக்கு மிக மிக அவசியமாகும்.

ஆட்சியுரிமை முழுவதையும் பெற்றாலே நாம் விருத்தியடைய முடியும் என்ற நம்பிக்கைகொண்ட தலைவர் திருச்செல்வம் ஆட்சியுரிமையைச் சாதுர்யமாகச் சிறிது சிறிதாகவேனும் கைப்பற்றி விடவேண்டுமென்ற அசையா

(5-ம் பக்கம் பார்க்க)

சில வருடங்களுக்குமுன் சீனாவின் ஒரு பிரதேசத்தில் கிராமிய மக்கள் ஒன்று கூடி உள்ளூரில் கிடைத்த வசதிகளை மாத்திரம் பயன்படுத்தி ஏழு மலைகளைக் குடைந்து கால்வாய் அமைத்து நதியொன்றை திசைதிருப்பி, பல நூற்றாண்டு காலமாக தண்ணீர் வசதியற்றுக்கிடந்த பிரதேசத்தை வளமாக்கிய நிகழ்ச்சியை இந்த 'உதாரகம' வின் அமைப்பு எமக்கு ஞாபகமூட்டுகின்றது.

ஏற்கனவே இப்படியொரு திட்டம் உடாகம என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இனி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார் உட்பட 22 மாவட்டங்களிலும் இம்மாதிரித் திட்டங்கள் செயல்படுத்தப்படவிருக்கின்றனவாம்.

பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்திசெய்யும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு சகல தொகுதிகளிலும் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

குறுகிய காலத்தில் கிராம அபிவிருத்திக்கு வித்திடக் கூடிய இத்திட்டத்தின் மூலம் நெடுங்காலம் நிலைக்கக்கூடிய சமூக உணர்வினையும் வளர்க்கமுடிவதால் இது பாராட்டி வரவேற்கக் கூடியதுடன் சகலரும் தயக்கமின்றி ஒத்துழைக்க வேண்டியதுமாகும்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும். நன்றே நினைமின் நமன் இல்லை".

—திருமூலர்

### போக்குவரத்து விதிகள்:

# நடவடிக்கை எடுக்குமுன் பொலிசார் கவனிப்பரா?

வீதிப் போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு எதிராக யாழ். பொலிசார் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

யாழ் மக்கள், பொலிசாரின் இந் நடவடிக்கையை நிச்சயம் வரவேற்பர். ஆனால் பொலிசாரின் இந்நடவடிக்கை தொடர்பாக சில முக்கிய விஷயங்களை ஆராய்வது இச் கட்டத்தில் பிறப் பெனப்படுகிறது.

நகர்ப்புறத்தில் ஜனத்தொகை அதிகரித்துவிட்டது. நகரில் எது எது ஒருவழிப் பாதை என்பது தெளிவாக வரையறுத்து வாகனமோட்டிகளுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

யாழ்ப்பாண நகருக்குள் புதிதாக வாகனத்தில் நுழையும் ஒருவர் எது ஒருவழிப்பாதை என்றுபுரியாது. தர்மசங்கடநிலைக்குள்ளாகி சட்டத்தின் பிடியிலும் சிக்க நேரிடுகிறது. பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நல்லுறவு நிலவவேண்டுமென பெரிதாக பேசிக்கொள்ளப்படுகின்ற இன்றைய சூழ்நிலையில் அப்பாவி பொது மக்கள் மனம்நோகும் வகையில் அவர்களே நடந்து கொள்ளலாமா?

ஒருவழிப்பாதை என பொலிசார் குற்றப்பத்திரிகையில் குறிப்பிடும் பாதையில் சைக்கிளை திருப்பவோர், சைக்கிளை திசை திருப்பி தற்செயலாகத் திருப்பி வைத்திருப்போர் கூட கைதுசெய்யப்படுகிறார்கள்.

சந்திகள்தோறும் எது ஒரு வழிப்பாதை என்பது தெளிவாகக் காட்டப்பட வேண்டும். அத்துடன் வீதிப்போக்குவரத்து விதியை மீறி ஒரு வழி பாதையில் சைக்கிளைச் செலுத்தியோர் என தவறாகக் கைதுசெய்யப்படும் கௌரவஸ்தர்கள் கூட பொலிஸ் வாகனத்தில் திருட்டு, ஜேப்படி முதலானவை உட்பட பல்வேறு கீழ்த்தர குற்றச் சாட்டுகளில் கைதுசெய்யப்படுவோருடன் ஒன்றாக அமர்த்தி பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப்படுகிறார்கள்

வீதி விபத்துக்கள் உண்டாகக் கூடிய வகையில் பக்கம் பக்கமாகச் சைக்கிள்கள் செலுத்துவோர், நடுவீதியில் சைக்கிள்களை நிறுத்துவோர் எவருமே பொலிசாரின கண்களில் படாமல் ஒருவழிப் பாதை சைக்கிளோட்டிகளிடம் மட்டும் பொலிசார் இத்தனை தீவிரம்காட்டுவது ஏனோ தெரியவில்லை.

எனவே ஒருவழிப் பாதை பற்றிய சட்டநடவடிக்கையில் அதிதீவிரம் காட்டும் பொலிசார் ஒவ்வொரு சந்தியிலும் எது ஒரு வழிப் பாதை என்பதை தெளிவாக எடுத்துக்காட்டும் வகையில் ஒருவழிப்பாதையை விளக்கும் கம்பங்கள் நாட்ட முதல் நடவடிக்கை எடுப்பது சாலப் பொருத்தமானதாகும்.

எஸ். பாலசுப்பிரமணியம்.
யாழ்ப்பாணம்.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

### யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர்கவனத்திற்கு...

ஈழநாடு 19-11-78 இதழில் 'மின்சாரத்தடைக்கு மாநகரசபை மட்டும் காரணமில்லை" என்ற தலைப்பில் மாநகரசபை விசேட ஆணையாளர் விடுத்த அறிக்கையைக் கண்ணுற்றேன், மின்சாரத் தடைபற்றி மின்சாரப் பாவனையாளர் பிரதமருக்கு அனுப்பிய தந்தி பற்றிய செய்திக்கு (ஈழநாடு 9-11-78) பதில் கொடுட்டதில் ஆணையாளர் காட்டிய அவசரத்தை மின்சாரத்தடையை சீர் செய்வதில் காட்டியிருந்தால் இந்நிலை உருவாகியிருக்காது.

9-11-78 முதல் 11-11-78
(5 ம் பக்கம் பார்க்க)



# கயானு காட்டிலிருந்த சமய அலுவலகத்தில்
# 400 அமெரிக்கரின் சடலங்கள்!
## 700 பேரைக் காணவில்லை!!

## 165 பெண்கள், 82 குழந்தைகள் தற்கொலை எனச் சந்தேகம்!!!

ஜோர்ஜ்டவுண், நவ. 21
கயானுவில் காட்டுப் பகுதியில் உள்ள சமய நிறுவனம் ஒன்றின் தலைமை அலுவலகத்தில் அமெரிக்க சமயஸ்தாபனத்தைச் சேர்ந்த 400 பேரின் சடலங்கள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.

இந்த 400 பேரில் 165 பெண்களும் 82 குழந்தைகளும் அடங்குவர்.

இந்தச் சமயப் பிரிவிலிருந்த 500 முதல் 700 பேர் பேர் வரையிலானவர்கள் பற்றி எதுவும் தெரியவில்லை.

கடந்த சனியன்று அமெரிக்க எம். பி ஒருவரும் மற்றும் 4 அமெரிக்கப் பிரஜைகளும் கொலை செய்யப்பட்டுக்கிடந்த இடத்திலேயே இச்சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதே காட்டுப்பகுதியில் அமெரிக்க செனட்டர்கள் பணயமாகப் பிடித்துவைக்கப் பட்டிருப்பது குறித்து விசாரணை செய்ய அங்கு சென்றபோதே இவர்கள் ஐவரும் கொலைசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

### தற்கொலை என சந்தேகம்

சடலங்களாகக் கண்டு பிடிக்கப்பட்டவர்கள் தற்கொலை செய்திருக்கலாம் என்று குறிப்பிட்ட தலைமை அலுவலகத்திலிருந்து தப்பிவந்த அமெரிக்கப் பிரஜை ஒருவர் தெரிவித்தார்.

"தற்கொலை செய்யலாமா" என்று அங்கிருந்தவர்கள் ஆலோசனை செய்தனர் என்றும் தாம் தப்பி ஓடிவருகையில் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

---

துறைமுக ஊழியர்

## வேலை நிறுத்தத்தைக் கைவிடக் கோரிக்கை!

புதுடில்லி, நவ. 21
நான்கு நாட்களாகத் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்துவரும் துறைமுக ஊழியர்களை வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு மத்திய தொழிலாளர் நல அமைச்சர் திரு. ரவீந்திரவர்மா இரண்டாவது தடவையாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதே வேளையில் வேலை நிறுத்தம் காரணமாக இந்தியாவின் 10 துறைமுகங்களில் பம்பாய், கொச்சி, கல்கத்தா ஆகிய துறைமுகங்களில் முற்றாக வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதே சமயம் தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையே இன்று பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. (இ)

---

## இந்தியப் பாராளுமன்றத்தின் முன்
# தொழிலாளர் ஆர்ப்பாட்டம்!

புதுடில்லி, நவ. 21
ரயில்வே, நிலக்கரிச் சுரங்கம், பாதுகாப்புச்சேவைகள், வங்கிகள் ஆகிய அரசாங்க சேவைகளில் வேலை நிறுத்தம் செய்வதைத் தடை செய்யும் சட்டமூலத்திற்கு எதிராக நேற்று இந்தியப் பாராளுமன்றத்திற்கு முன்னால் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று செய்யப்பட்டது.

அண்மைக் காலங்களில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டங்களில் மிகப் பெரியது என்று கருதப்படும் இதில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

வேலை நிறுத்தத்தைத் தடை செய்யும் சட்டமூலம் தற்போது மேல்சபையில் பரிசீலிக்கப்பட்டுவருகிறது. (இ)

---

கொடிகாமத்திற்கு மின்சாரம்

## குடியிருப்பாளரிடம் ரூபா 30 ஆயிரம் திரட்ட முடிவு

(சாவகச்சேரி)
கொடிகாமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்காக அப்பகுதியிலுள்ள குடியிருப்பாளர்களிடமிருந்து 30,000 ரூபா திரட்டுவதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கமண்டபத்தில், தென்மராட்சி பிரதி அரசாங்க அதிபர் திரு எஸ். முருகவேள் தலைமையில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றது

இக்கூட்டத்தில், கொடிகாமப்பகுதிக்கு, விரைவில் மின்சாரம் பெறுவதற்காக நடவடிக்கை எடுப்பதென்றும், 150 குடியிருப்பாளர்களிடம், தலா 200 ரூபா வீதம் திரட்டி, மின்சார சபைக்குக்கட்டுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

பிரதான வீதிகளுக்கருகில் உள்ள வீடுகளுக்குமட்டுமன்றி ஒழுங்கைகளுக்குள் உள்ள வீடுகளுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

இக்குழுவின் தலைவராக திரு என. குமாரசுவாமியும், செயலாளராக திரு எஸ். சின்னையாவும், பொருளாளராக திரு சி. அருளம்பலமும்தெரிவு செய்யப்பட்டனர். [க]

---


நெற் களைகளை அழிக்க
நிகரற்ற வழி
ஹெடோனல் எம் 40%

40% எம். சி. பீ. ஏ. சோடியம், பொட்டேஷியம் உப்புகள் கொண்டது.

நெற் பயிரைப் பாதிக்கும் அகன்ற இலைக் களைகளை அதி வன்மையுடன் கட்டுப் படுத்த வல்லது ஹெடோனல் எம் 40%. அபாயகரமான அகன்ற இலைக் களைகளையும் புதர்ச் செடிகளையும் மிகச் சுலபமாக அழித்தொழித்து, நெல் விளைச்சல் நேர்த்தியாக நிகரற்றுப் பெருக வழி செய்கிறது அது.




ஹெடோனல் எம் 40% பாவித்து.
விளைச்சலைக் கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமானவை
BAYER
பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.
தொலைபேசி: 93563, 96331-6

melADS


---

## நூல் நிலையத்திற்கு 60 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

(சாவகச்சேரி)
கொடிகாமத்தில் நூல் நிலையம் ஒன்று நிறுவித்தருமாறு அப்பகுதி இளைஞர்கள் விடுத்த கோரிக்கையைச்சாவக்கிராம ஆணையாளர் திரு எஸ் முருகவேள ஏற்றுள்ளார்.

நூல் நிலையம் அமைப்பதற்கு வரவு-செலவுத் திட்டத்தில், சுமார் 60,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நூல் நிலையம், பருத்தித்துறை வீதியிலுள்ள சபைக்குரிய நிலத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

ஜனவரிமாதம் நூல்நிலையக் கட்டடவேலைகள் ஆரம்பமாகவிருக்கின்றன. (க-அ)

---

## படகு விபத்தில் 18 பேர் பலி!

பட்னா, நவ. 21
பீகாரில் நடைபெற்ற படகு விபத்தில் 18 பேர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு ஒன்றில் 45 பேர் பயணம் செய்த படகு கவிழ்ந்ததை அடுத்து 27 பேர் நீந்திக் கரை சேர்ந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

---

## பாடப் புத்தகத்தில் மதுவிலக்கு ஆலோசனை

புதுடில்லி, நவ. 21
மதுவிலக்கு கொள்கைகளைப் பரப்பும் அம்சங்களை பாடப் புத்தகங்களில் சேர்க்குமாறு இந்திய மத்திய அரசு, மாநில அரசுகளையும் கல்வி திணைக்களங்களையும் கேட்டுள்ளது. (இ)

---

## பூமதியன் கடும் சுகவீனம்

அல்ஜியர்ஸ், நவ 21
அல்ஜீரிய ஜனாதிபதி ஹுவாரி பூமதியன் கடும்சுகவீனமுற்றிருப்பதையடுத்து 9 அங்கத்தவர் கொண்ட புரட்சிசபை ஒன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது.

அண்மையில் மாஸ்கோ சென்று சிகிச்சைபெற்றபின் நாடு திரும்பிய ஜனாதிபதி பூமதியன் கடந்த வெள்ளியன்று மீண்டும் சுகவீனமுற்றார். படுக்கையிலிருந்து சிகிச்சை பெற்றுவரும் இவருக்கு செயற்கைச் சிறுநீரகம் பொருத்தப்பட்டுள்ளது. இவருக்கு வயது 51. (இ)

---

## சகலரும் வழிபட்டனர்

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற விசேட அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து சகலசமூக மக்களும் சென்று வழிபட்டனர்.

---

## 'திரு' உருவச்சிலை

(யாழ்ப்பாணம்)
அமரர் மு திருச்செல்வத்திற்கு உருவச்சிலை அமைக்கும் வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

சில வாரங்களில் இச்சிலை யாழ் நகரில் திறந்துவைக்கப்படும். (உ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
பாலாஜி
அன்புஎங்கே

நாகம்ஸ்
(கன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
பெண் தெய்வம்

Rio (Jaffna)
Daily 4 Shows
Michael Caine in
KIDNAPPED
(Mistery—Thrill)

ராஜா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி ஜெமினி
சாவித்திரி
பந்தபாசம் (புதியபிரதி)

கடைசி இருதினங்கள்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடித்த
திருடாதே [புதிய பிரதி]

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் போன்: 466
(யாழ்ப்பாணம்) 4-வது ஜனத்திரள் வாரம்
சிவராம் சந்திரகலா தனரத்தினம்
நடித்த
அநுராகம்

சிவாஜிகணேசன
பைலட் பிரேம்நாத்
இலங்கை விஜயம்பற்றிய செய்திப்படம்

REGAL
(Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m.
Sidney James, Kenneth Williams
in
'CARRY ON MATRON'
(Color)

மனோகரா
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த்
சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

தினசரி 4 காட்சிகள்
வீரபாண்டிய கட்டபொம்மனின் தொடர்காவியம்
ராணி எஸ். எஸ். ஆர்- விரப்பா
குமாரி கமலா- டி. கே. பகவதி-ராஜம்
[யாழ். நகர்] நடித்த
சிவகெங்கைச் சீமை புதியபிரதி

வெலிங்டன் தினசரி 3 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] சனி, ஞாயிறு 4 காட்சிகள்
கல்யாணிக்கு கல்யாணம்
அடுத்தவெளியீடு: லலிதா

லிடோ போன் 7658 தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்) எங்கள் தங்க ராஜா

SHANTHI JAFFNA. Phone: 7642
Daily 10-30, 2-30, 6-30, 9-45
Gamini Fonseka (22—23 only)
Chandi Shyama (SINHALA)
24-11-78 "சொல்லத்தான் நினைக்கிறேன்"
27-11-78 "BLOOD MONEY"


## சரவணமுத்து முதலிடம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாவித்தியாலய இல்லவிளையாட்டுப் போட்டியில் சரவணமுத்து இல்லம் மேலதிக புள்ளிகளை பெற்று முதலிடம் பெற்றுள்ளது. இரண்டாவதாக பொன்னையா இல்லமும் மூன்றாவதாக வேலுப்பிள்ளை இல்லமும் நான்காவதாக வைத்தியநாத ஐயர் இல்லமும் வந்துள்ளன பொன்விழாக்காணும் இம் மகாவித்தியாலயம் அதன் நான்கு இல்லங்களும் இங்கு பணி புரிந்த முக்கியமான நான்கு அதிபர்களின் பெயரைச் சூட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. சரவணமுத்து என்பவரே இம்மாகாவித்தியாலயத்தின் முதலதிபரா வார். (அ)

## விஞ்ஞான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தில் இம்மாதம் 26ந் திகதி ஆரம்பமாகும் உயர் வகுப்பு ஆசிரியர்களுக்கான விஞ்ஞான கருத்தரங்கை கல்விமாஅதிபதி திரு மகாதேந்தில ஆரம்பித்துவைப்பார் வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் தலைமை வகிப்பார்.

இக்கருத்தரங்கு டிசம்பர் மாதம் 8ம் தேதி வரை தொடர்ந்து நடைபெறும். (ச)

## தலைவர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கை கொண்டிருந்தார். எங்களத்தலைவர்களுடனும்பிற நாட்டுத் தலைவர்களுடனும் நாம் எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்ற முறையில் சரிநிகர்சனமாகப் பழகுவார்.

அன்னாரின் நினைவுகூரும் இந் நாளில் மீண்டும் எமது இறைமையை நிலைநாட்டவும் அன்னார் காட்டிய பாதையைப் பின்பற்றி விடுதலை பெறவும் நாம் எல்லோரும் திடசங்கற்பம்கொள்வோமாக. (அ)

## யாழ். மாநகர...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை ஏற்பட்ட மின்சாரத் தடைக்கு ஆணையாளர் கூறும் காரணத்தை ஏற்றுக்கொள்ளலாம். 9-11-78 முதல் 11-11-78 வரை மனோகரா மின்உபநிலையத்தில் ஏற்பட்ட மின்சாரத்தடைக்கு யாரைக் குறைகூறுவது? இதிலும் 10-11-78 முதல் 11-11-78 வரை ஏற்பட்ட மின்தடைக்கு மாநகரசபையே முழுக்காரணம்என்பதை மறுப்பது சாத்தியமானதல்ல.

மாநகர மின்இணைப்பில் உள்ள தொழில்நுட்பத் தவறுகள் பற்றி இத் தொழில் தெரிந்த பலர் கூறும் குறைகளை மாநகரின் கௌரவ ஆணையாளர் தெரிந்து நிறைசெய்யமுனைவது ஆரோக்கியமானது. அதேபோன்று மின்தடைகளை உடனுக்குடன் கவனிப்பதற்கு மாநகரசபையில் உள்ள வசதிகளை (வாகனம், தொழிலாளர்கள், ஏனைய உபகரணங்கள்) குறைந்தபட்சம் இரட்டிப்பாக அதிகரிப்பதற்கு முயல்வதும் ஆரோக்கியத்தின்பாற்பட்டதாகும். இம்முனைப்பு தொழிற்சாலைகள் தடைப்படாது இயங்கவும், திருட்டுச்சம்பவங்கள் தடைப்படவும் உயிர்கள் பலிபோகாது இருக்கவும் உதவும்.

மாநகர எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு உபமின் இணைப்புப் பகுதியிலும்மின்சாரபாவனையாளர் சங்கம் அமைக்கப்படவேண்டும். இச் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு "யாழ் மாநகர மின்சாரப் பாவனையாளர் சங்கம்" அமைக்கப்படலாம். இத்தகைய அமைப்பு இன்று இரு தரப்பிலும் அவசியமானதாகும். பாவனையாளர் குறைகளையும் தேவைகளையும் மாநகரசபைதெரிந்துகொள்ளவும், மாநகரசபையின் வசதிகட்கு ஏற்ப பாவனையாளர் நடந்துகொள்ளவும் இது வசதியாக அமையும் அதே பொழுதில் மின்சக்தியை வைத்திருக்கவும் மேல் அதிகாரிகள் அறியாதவகையில் கீழ் மட்டத்தில் நடைபெறும் தில்லுமுல்லுகளை கட்டுபடுத்த இத்தகைய அமைப்பு அவசியம். இவற்றை மதிப்புக்குரிய மாநகர விசேட ஆணையாளர் கவனத்தில் கொள்வார் என நம்புகின்றேன்.

ஆர், ஜோஜ்.
கே கே எஸ் வீதி.
யாழ்ப்பாணம்

## சென்ஹென்றீஸ் கல்லூரி உதைபந்தாட்ட போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

இளவாலை சென்ஹென்றீஸ் கல்லூரி பங்குபற்றிய சிநேகபூர்வமான உதை பந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:

ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரிக்கு எதிராக நடைபெற்ற 2-ம் 3-ம் பிரிவுப் போட்டிகளில் சென்கெறீஸ் கல்லூரி 2-ம் 3-ம் பிரிவுப் போட்டிகளில் சென்கென்றீஸ் கல்லூரி 2-ம் பிரிவில் 6-0 கோல்களாலும் 3-ம் பிரிவில் 5 - 1 கோல்களாலும் வெற்றியடைந்தது சென் ஜோன்ஸ்கல்லூரிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 3-ம் பிரிவில் 2-1 கோல்களாலும் 2-ம் பிரிவில் 6-0 கோல்களாலும்வெற்றியீட்டியது 1-ம் பிரிவில் இரு கோஷ்டிகளும் கோல்களைப் போடவில்லை.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 3ம் பிரிவில் 7 - 0 கோல்களாலும் 2-ம் பிரிவில் 8- 0 கோல்களாலும் 1 - ம் பிரிவில் 7-1 கோல்களாலும் ஹென்றீஸ் வெற்றியீட்டியது.

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 3-ம் பிரிவில் 5 - 1 கோல்களாலும் 1-ம் பிரிவில் 2- 0 கோல்களாலும் ஹென்றீஸ் வெற்றியீட்டியது.

சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 3- ம் பிரிவில் 2-0 2-ம் பிரிவில் 1-0 கோல்களால் ஹென்றீஸ் வெற்றியீட்டியது.

இங்கு தரப்பட்ட போட்டிகள் அனைத்திலும் சென்றீஅரசர் கல்லூரி மிகத்திறமையுடன் விளையாடி பெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது அத்துடன் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய வீரர்களில் 8 பேர் இக்கல்லூரியின் 3-ம் பிரிவில் விளையாடியுள்ளனர் (இ)

## த. ஆ. சங்கபரு. கிளை

[புலோலி]

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க பருத்தித்துறைக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டம் திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலைமண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட மன்றில்

காலஞ்சென்ற முருகேசு சிவசம்பு, கிளிநொச்சி என்பவரின் மரணசாதனமில்லாத மரணச்சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3408

எதிராக

முருகேசு சிவசம்பு கைம்பெண் கனகம்மா ஸ்ரீ முருகன் அரிசி ஆலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி. மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் கொண்ட குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு மார்கழி மாதம் முதலாம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1978-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 28-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

வரைதல்:
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
0852

Melville Amauw Designs.
BAYER
விவசாய இரஸாயனப் பொருள்
லெபேசிட்
பாவித்து
நெற்பயிரைத் தாக்கும் பூச்சிப் புழுக்களை கட்டுப் படுத்தவும்
தயாரித்து விநியோகிப்போர்
ஹேகெம் லிமிட்டட்
400, யூனியன் பிளேஸ், கொழும்பு தொலைபேசி: 93563 - 96331 - 6

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை

# தொழில் முன்னிலைப்பயிற்சி மாணவர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் இரண்டுவருட தொழில் முன்னிலைப் பாடநெறி விசேட பயிற்சியைப் பெற்று இவ்வருட இறுதியில் வெளியேறும் 24 ஆசிரியர்களில் 17 பேரின் பெயர்களே கல்வி அமைச்சிலிருந்து யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பெயர்ப்பட்டியலில்17பேரில் 12 பேருக்கு மட்டுமே அவர்கள் கடமையேற்க இருக்கும் பாடசாலைகளின் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

பெயர்ப்பட்டியலில் இடம் பெறாத 7 மாணவர்களினதும் பாடசாலை குறிப்பிடப்படாத 5 பேரினதும் நிலை குறித்து கலாசாலையும், குறிப்பிட்ட மாணவர்களும் எதுவும் தெரியாத நிலையில் உள்ளனராம். இதுகுறித்து குறிப்பிட்ட 12 மாணவர்களும் கலாசாலை அதிபரிடம் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (இ)

## பிரேமாவும்—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஒமென்ற டாக்டர்களின் ஆலோசனைப்படி சேர்ஒலிவர் கொழும்பிலுள்ள அவரது மகனின் இல்லத்தில் ஓய்வு எடுத்துவருகின்று.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி ஆகியோரும் அவரை சந்தித்தனர்.

## ப. நோ. கூ. சங்கம் மக்கள் கடை நிறுவும்

(புலோலி)

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் பொதுமக்களின் நன்மைகருதி பருத்தித்துறையில் பலவகை பொருட்களும் விற்பனை செய்யும் ஒரு மக்கள் கடையை நிறுவவுள்ளது.

பொதுமக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய இம்மக்கள் கடையினை பருத்தித்துறை பண்டகசாலை நிலயத்திற்கு அண்மையில் நிறுவுவதற்கான சகல நடவடிக்கைகளையும் ப. நோ. கூ. சங்க இயக்குநர்சபை மேற்கொண்டுள்ளதாக இச்சங்க பொதுமுகாமையாளர் திரு. செ. சதாசிவம் தெரிவித்துள்ளார். (உ)

## புதிய...

(2ம் பக்கத்தொடர்ச்சி)

சீ. சண்முகநாதன் பலாலியிலும் எம். கனகநாயகம் மாவிட்டபுரத்திலும் கிராம சேவையாளர்களாக கடமையாற்றுவார்களென யாழ் அரசாங்கஅதிபர் திரு லயனல் பெர்னன்டோ அறிவித்துள்ளார். (உ)

# வசதியற்ற பிள்ளைகளை எவ்வாறு நிர்ணயிப்பீர்கள்?

## நல்லூர் சிவா கேள்வி

[கொழும்பு]

வசதியற்ற குழந்தைகளுக்கு பழையவகுப்பிலேயே பால உணவுகளை அரசு வழங்கப் போவதாக அமைச்சர் அறிவித்துள்ளார். அப்படியானால் இதனை எவ்வாறு அமைச்சர் நிர்ணயிக்கப்போகிறார் என்பதைத் தெளிவாக்க வேண்டும் என்று நேற்று பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் பேசிய நல்லூர் தொகுதி எம். பி யும், தமிழ் விடுதலைக்கூட்டணித் தலைவருமான திரு. எம்.சிவசிதம்பரம் கேட்டார்.

வரவுசெலவுத்திட்ட விவாதத்தை திரு. சிவசிதம்பரம் எதிர்க்கட்சியின் சார்பில் ஆரம்பித்துவைத்து பேசினார்.

பால்மாவின் விலைகளை வசதி குறைந்த பிள்ளைகளுக்கு பழைய விலையிலேயே வழங்கப் போவதாக விவாத ஆரம்பத்திலேயே அறிவித்துவிட்டதைக் குறிப்பிட்ட திரு. சிவசிதம்பரம், இந்த அறிவித்தல் காரணமாக தமது பேச்சை சுருக்க வேண்டியேற்பட்டு விட்டதாகக் குறிப்பிட்டார்.

இந்த வரவுசெலவுத்திட்டம் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்காது. வசதியற்றவர்களின் பிள்ளைகளை எவ்வாறு நிர்ணயிக்கப்போகிறார்கள். இதை அமைச்சர் தெளிவாக்கவேண்டும் என்றுகூறிய திரு. சிவசிதம்பரம் இந்த அரசு வகுப்பு ஒற்றுமையை உருவாக்க முயன்று வருவதாக அமைச்சர் கூறினார், ஏனைய பல அமைச்சர்களும் இவ்வாறு கூறிவருகிறார்கள்; ஆனால் இதில் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரின் பங்கு என்ன என்பதை அறிய விரும்புகின்றேன் தமிழ் மாணவர்களின் வினாத்தாள்கள் திருத்தப்பட்டது தொடர்பாக அவர் பாராளுமன்றத்திலும் பின்னர் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டிலும் சில தகவல்களை வெளியிட்டிருந்தார் இவைபற்றி இங்கு நான் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் குழுநிலை விவாதத்தின்போது அவரது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு தகுந்த பதிலளிக்கவிருக்கிறோம்'' என்று [ ]

ஆசிரியர்களின் சம்பள விநியோகம்:

# வடமாகாண அதிபர்கள் இன்று கூடுகின்றனர்

[யாழ்ப்பாணம்]

வடமாகாண ஆசிரியர்களின் சம்பள விநியோகம் பற்றி ஆராய்வதற்காக வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

துப்பாக்கி முனையில் ஆசிரியர்களின் சம்பளப் பணம் வடபகுதியில் கொள்ளையடிக்கப்படுவதையொட்டி வங்கியிலிருந்து சம்பளப் பணத்தைப் பெற்று ஆசிரியர்களுக்கு வழங்குவதற்குப் பொறுப்பாக இருக்கும் அதிபர்கள் தங்கள் சங்கத்தின் மூலம் சம்பளத்தை தனித்தனி காசோலைகளாக ஆசிரியர்களுக்கு வழங்குமாறு அல்லது கல்வி இலாகாவினரோ சம்பளப் பணத்தை நேரில் ஆசிரியர்களுக்கு வழங்குமாறு கல்விப் பகுதியினரை கோரியிருந்தனர்.

இக்கோரிக்கை தொடர்பாக கொழும்பில் நடந்த உயர் அதிகாரிகள் மகாநாட்டில் சம்பளப் பணத்தை காசோலைகளாக வழங்குவது சாத்தியமாகாதென்றும், வழக்கம் போல் அதிபர்களே பணத்தை வங்கியிலிருந்து பெற்று விநியோகிக்கவேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது.

வங்கியில் சம்பளத்தைப் பெறும்போது வாகன உதவியும், போதிய பொலிஸ் இராணுவ பாதுகாப்பும் அளிக்கப்படவேண்டும் என்றும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

உயர் அதிகாரிகளின் முடிவு பற்றியும், இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வடமாகாண அதிபர்கள் சங்க விசேஷ பொதுக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தமது ஆலோசனைகளை வழங்குமாறு வடமாகாண கல்லூரி அதிபர்கள் சங்கம் அதிபர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. (க-அ)

சிகரட் வான் கொள்ளை:

# அடையாள அணிவகுப்பு நடைபெறவில்லை!

(யாழ்ப்பாணம்)

சிகரட்வான் கொள்ளை தொடர்பான 5 சந்தேகநபர்களும் நேற்று மூடிமறைக்கப்பட்ட வாகனத்தில் மல்லாகம் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டபோதிலும் வசதியீனம் காரணமாக அடையாள அணிவகுப்பு நடைபெறவில்லை.

மல்லாகம் நீதவான் திரு. ஆனந்தகுமாரசுவாமி அடையாள அணிவகுப்பை இம்மாதம் 23ம் தேதிக்கு பின்போட்டார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம், சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு, சட்டத்தரணி செல்வி ஷிராணி கனகரத்தினமும் ஆஜரானார்கள். (க)

## மகாதேவா..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஊர்காவற்றுறை-காரைநகர் பாலவேலைக்கு 70 லட்சம் ரூபா; பண்ணைப் பாலத்தை விஸ்தரிப்பதற்கு 10 லட்சம் ரூபா; குறிகாட்டுவான் துறைமுக மேடை திருத்துவதற்கு 8 லட்சம் ரூபா.

இந்த வேலைகள் 1982ம் ஆண்டுக்குமுன் பூர்த்தியாகுமெனத் தெரிகிறது.

குறிகாட்டுவான் துறைமுக மேடைக்கு அடுத்த ஆண்டில் இரண்டு லட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (க-அ)

## திருநெல்வேலியில் இன்று

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா மண்டபத்தில் பகவானின் பிறந்ததினவிழா இன்று கொண்டாடப்படுகிறது நிகழ்ச்சி விபரம் வருமாறு:

காலை 8 மணி—இலட்சார்ச்சனை, 10 மணி பாதபூசை, பிற்பகல் 3 மணி—பஜனை, மாலை 5-30 மணி சிறப்புச் சொற்பொழிவு - திருமதி டாக்டர் எஸ் திருநாவுக்கரசு. மாலை 6 மணி—தீபாராதனையும் பிரசாதம் வழங்கலும். (அ)

## நல்லெண்ண விஜயம்

(யாழ்ப்பாணம்)

இந்தியன் வில்லியர்ஸ் ரெகஸ்மோ நீரிறைக்கும் இயந்திரத்தை இலங்கையில் அறிமுகம் செய்யுமுகமாக நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு வடபகுதிக்கு மேற்படி நிறுவனத்தின் விற்பனை அதிகாரி திரு ஆர் ஸ்ரீநிவாசன் விஜயஞ்செய்துள்ளார்.

வடபகுதியின் பல இடங்களிலும் இயந்திரச் செயற்பாடு குறித்துச் செயல்முறையுடன் இவர் விளக்கினார். (கெ)

## கூட்டுறவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்

''முன்னைய அரசாங்கத்தில் தரகர்கள்தான் கொடிகட்டிப் பறந்தார்கள். அதிக லாபம் சம்பாதித்தார்கள் தட்டுப்பாடு, விலைதிகரிப்பு ஆகியவற்றைத் தவிர்க்கவே வெங்காயம், மிளகாய் இறக்குமதி செய்யப்படுகிறது'' என்றும் அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார். (ம)

## இந்திரா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கையை இன்று சமர்ப்பித்தது

பாராளுமன்ற கீழ்சபையில் இடம்பெற்ற கேள்வி நேரத்தில், முன்னாள் பிரதமர் தமது பதவியை முறைகேடாகப் பயன்படுத்தி சபை உரிமை மீறல்செய்து சபையை அவமதித்தார் என்றும் மாருதி நிறுவனம் சம்பந்தமாகக் கேட்கப்பட்ட கேள்விகளின் போதே இந்த உரிமை மீறல் நடந்ததென்றும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ள பாராளுமன்ற உரிமைகள் குழு; இக்குற்றங்கள் தொடர்பாக என்ன தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதை சபைதான் தீர்மானிக்கவேண்டும் என்று கூறியுள்ளது

திருமதி இந்திராகாந்தியின் முன்னாள் அந்தரங்க உதவியாளர், மற்றும் உளவுப் பணியகத்தின் முன்னாள் உயர் அதிகாரி ஆகியோரும் குற்றவாளிகளாக இக்குழுவினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்

பாராளுமன்ற விசேட உரிமைகள் குழுமுன், இந்தியப் பிரதமர் ஒருவர் சபையின் உரிமை மீறல் சம்பந்தமாக குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பது இதுவே முதற்தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## காருடன் காணவில்லை

(கல்முனை)

கல்முனையைச் சேர்ந்த முகமது லெப்பை சின்னத்தம்பி என்பவரையும் அவர் ஓட்டிச்சென்ற ஹில்மன் காரையும் கடந்த 17-ம் திகதி முதல் காணவில்லை என அறிவிக்கப்படுகிறது. (உ)

## பிறந்ததின விழாவில்

தாய்க்கும்மகளுக்கும்காயம்

[யாழ்ப்பாணம்]

பேரப்பிள்ளையின் பிறந்ததினவிழா கொண்டாடப்பட்டபோது ஏற்பட்ட சம்பவத்தில் ஒருதாயும், மகளும் படுகாயமடைந்து யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் 5ம் குறுக்குத் தெருவிலுள்ள வீடொன்றில் நேற்று காலை இச்சம்பவம் நடந்தது.

இச்சம்பவத்தின்போது காயமடைந்த ஜோசப்பின் விஜயரத்தினம் [47 வயது], மகள் விஜயரத்தினம் [17 வயது] ஆகிய இருவரும் மயக்கமடைந்தநிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது

சந்தேகநபரான விஜயரத்தினத்தை யாழ்ப்பாணம் பொலிஸார் தேடிவருகின்றனர். [க]

## இருளில்—

1-ம் பக்கத் தொடர்ச்சி)

னார்கள்.

அந்த நேரத்தில், 'தலைவர்களைக் காட்டாதீர் சொன்னீர்கள்' என்று பல குரல்கள் ஒலித்தன.

அமைச்சர் காமினி திசாநாயக்கா சபையில் உரை நிகழ்த்திக்கொண்டிருந்த போது மூன்று தடவைகள் மின்சாரத்தடை ஏற்பட்டது.

அப்பொழுது திருமதி சிறிமா பண்டாரநாயக்க ஏதோ தமாஷாகச் சொல்ல, அமைச்சர் காமினி—

''திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குரல் இருள் நேரங்களில்தான் ஒலிக்கிறது'' என்றார். [ம]

## விற்பனைக்கு

24ம் நம்பர், டன்லொப் ரோட். யாழ்ப்பாணத்தில் உள்ள தகரத்தாலான கருச் கட்டடம் 120அடி நீளம் 40 அடி அகலத்தில் விற்பனைக்குண்டு. மின் போடுவதற்குச் சிறந்தது. மரம், ஓலை, தகரம் யாவும் நல்ல நிலையில் உள்ளது. நேரில் பார்வையிட்டு, விலை பேசத்திற்கு பேர்ப்படி கருச் உரிமையாளர் சபையுடன் தொடர்புகொள்ளவும். 0859


இன்று மட்டும்

தினசரி 10-30, 2-30, 6-30 9-15

ராஜா (யாழ்நகர்)

மரிக்கார் ராமதாஸ்

ஹெலன் குமாரி

மற்றும் பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து

ஏமாளிகள்


## மரண அறிவித்தல்

### திருமதி கனகவல்லி பொன்னம்பலம்

சங்கானையைச் சேர்ந்த திருமதி கனகவல்லி பொன்னம்பலம் காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற சிங்கப்பூர் பென்ஷனர் பொன்னம்பலத்தின் மனைவியும், வேதவல்லி, சிவகாமசுந்தரி, சிதம்பரநாதன், வீரசிங்கம், தங்கநாயகி ஆகியோரின் தாயாரும், சிவசோதி, நாகேந்திரன், மகேஸ்வரி, லூசில், முத்துலிங்கம் ஆகியோரின் மாமியாரும், சித்திரா, தர்மராஜா, சத்திவேல், சுமித்திரா, தவராஜன், அனுஷியா, இந்திரகுமார், முருகேசன், கேதீஸ்வரன் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் (22-11-78) இன்று பிற்பகல் 2-00 மணிக்கு, சங்கானை சரச்சி மயானத்தில் நடைபெறும். 0856


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 889, Registered as a Newspaper in SriLanka.